முறை, மாண்புமிகு உறுப்பினருக்கு நன்கு தெரியும்; தங்களுக்கும் தெரியும். 80 அடி வரையிலே பிரதானக் கால்வாயிலே தண்ணீர் போகாது; அதற்கு மேலேதான் தண்ணீர் எடுக்கலாம். இப்போது 85 அடி தண்ணீர் அங்கிருக்கிறது. ஆனால், மணிமுத்தாறினுடைய பாசன முறை என்ன? நவம்பர் மாதம் 1 ஆம் தேதி திறக்க வேண்டும், dam-ஐ; மார்ச் 31 ஆம் தேதி மூட வேண்டும். ஆனால், இந்த ஆண்டு அபரிமிதமான மழை பொழிந்த காரணத்தால்—reach முறையிலே கொடுப்போம், first reach, second, third reach என்று—ஆனால், இந்த வருடம், இந்த முறை கலைஞருடைய அரசு, நிறைய தண்ணீர் இருக்கிற காரணத்தினால், கிட்டத்தட்ட 125 நாட்களுக்கு மேலாக நான்கு reach-களுக்கும் தண்ணீர் கொடுத்தது. அதிலே, first preference, முதல் இரண்டு reach-களுக்கு; அதுவும் உங்களுக்குக் கொடுத்தோம். கிட்டத்தட்ட 170, 180 குளங்களுக்கு வந்திருக்கும், 1,200 ஏக்கர் பாசனத்திற்குக் கொடுத்தோம். இதுவும் போதவில்லையென்று, 80 அடிக்கு மேலே 5 அடி தண்ணீர் இருக்கிறது அதையும் திறந்துவிடுங்கள் என்று கேட்கிறீர்களே, என்ன நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. இதைத் திறந்தாலும் என்ன நடக்கப் போகிறது உங்களுக்கு? 6,000 ஏக்கர் பாசனத்திலே, standing crops இருக்கிறது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இதுகுறித்து நான், இன்றைக்கு மாலைக்குள் கலெக்டருடைய கருத்துருவைக் கேட்கிறேன். உள்ளபடியே தேவை என்று கருதினால், கலைஞருடைய அரசு, பயிர் வாடுவதற்கு அனுமதிக்காது. கலெக்டருடைய கருத்துரு கேட்ட பிறகு, மாலைக்குள் இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) திரு. வேல்துரை, எல்லாம் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், தமிழகத்தில் எந்தெந்தக் குடும்பங்களுக்குக் குடும்ப அட்டை இல்லையோ, அவர்கள் எல்லாம் மனு செய்தால், குடும்ப அட்டை வழங்கப்படும் என்று இந்த அவையிலேயே அறிவித்து, குடும்பக் கார்டு இல்லாதவர்கள் எல்லாம் இப்போது அதற்கான மனுக்களையெல்லாம் செய்து, அந்தக் கார்டுகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சில இடங்களிலே கார்டுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

2007 ஏப்ரல் 11] [திரு. சி. ஞானசேகரன்]

ஆனால், இன்றைய பத்திரிகையில், இப்போது இந்தத் துறையிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டு, புதிதாக மனு செய்தவர்கள் யாருக்கும் ரேஷன் கார்டு கொடுக்கத் தேவையில்லை என்றும், குடும்பத் தலைவர், பொதுவாக, ஒரு அப்பா இருக்கிறார்; மகனுக்குத் திருமணம் ஆகியிருக்கிறது; அவன் தனியாகப் போகிறான் என்று சொன்னால், அந்தப் பழைய குடும்ப அட்டையிலிருந்து அவனுடைய பெயரை நீக்கி, புதிய குடும்ப அட்டை அவனுக்கு மட்டுமே வழங்க வேண்டும்; மற்றவர்களுக்கு வழங்கத் தேவையில்லை என்றும் ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டு, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது. அது உண்மையா? புதிதாகக் கார்டு கேட்டு மனு செய்தவர்களுக்கு வழங்கப்படுமா, இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் அவைக்கு விளக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துரும்பைத் தூணாக்குவதும், இல்லாததையும் பொல்லாததையும் எழுதுவதையுமே பல பத்திரிகைகள் வாடிக்கையாக வைத்துக்கொண்டிருக்கின்றன. நான்கூட படித்தேன், 'புதிய ரேஷன் கார்டு விநியோகத்தில், அரசு திடீர் அதிரடி உத்தரவு' என்பதை. அப்படியெல்லாம் ஓர் உத்தரவை இந்த அரசாங்கம் வழங்கவில்லை. இந்த விநியோகக் கார்டு வழங்குவது என்பது, ஒரு தொடர் நடவடிக்கை. திருமணம் ஆகிறது; வேறொரு குடும்பத்திற்குப் போகிறார்கள்; மனு செய்கிறார்கள்; இப்படி ஒரு தொடர் நடவடிக்கை. எனவே, தொடர்ந்து இந்த விநியோகக் கார்டு கொடுக்கப்படுகிறது. ஆனால், களத் தணிக்கைக்குச் செல்கிறபோது—ஏனென்று சொன்னால், அவசரக் கோலத்திலே அள்ளித் தெளித்ததைப்போல, ஏற்கெனவே கிட்டத்தட்ட 39 இலட்சம் கார்டுகள், தவறான கார்டுகள் உலவிக் கொண்டிருக்கின்றன; ஏற்கெனவே தொடர்ந்து அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்; அதற்கு வேண்டிய முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம்; களத் தணிக்கை செய்ய அதிகாரிகள் போகின்றபோது—கூட்டுக் குடும்பத்திலிருந்து ஒருவர் பிரிந்து போகின்றார் என்று சொன்னால், அந்தக் கூட்டுக் குடும்பத்தைத் தணிக்கை செய்கிறபோது, அதிகாரிகள் deletion certificate-ஐப் போடவேண்டும். அவ்வாறு deletion certificate

[திரு. எ.வ. வேலு] [2007 ஏப்ரல் 11

கொடுப்பதன் மூலமாக, புதிய கார்டு கொடுக்கப்படும். ஏற்கெனவே இருக்கின்ற கார்டுகள் பறிக்கப்படாது; அது தொடர்ந்து இருக்கும். இது அதிகாரிகளுக்கு வாய்மொழியாகச் சொல்லப்படுகின்ற ஒன்று. ஏதோ அரசாணை பிறப்பிப்பதாக அல்ல. அரசாங்கம் தொடர்ந்து இந்த நடவடிக்கையை எடுக்கும்; தொடர்ந்து கார்டுகளை வழங்கும். (குறுக்கீடு)

முற்பகல் 10-50

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: Speaker Sir, ஒரு முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னவென்று சொல்லுங்கள்.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், ஜவ்வாது மலைப் பகுதி அடிவாரத்தில் அமைந்துள்ள கலசப்பாக்கம், போளூர், செங்கம் போன்ற பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக யானைகளுடைய அட்டகாசம் அதிகமாகி, அதன் காரணமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற வீரளூர் கிராமத்திலே இருக்கின்ற வேடியப்பன் மற்றும் சின்னசாமி ஆகியோரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டு, அவர்களுடைய பயிர்களும் சேதமடைந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்களா?

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: நேற்றே கொடுத்திருக்கிறேன். எனவே, அவர்களுடைய உயிருக்குப் பாதுகாப்பும், வனவிலங்குகள் தொடர்ந்து அந்தப் பகுதிகளிலே செய்து வருகின்ற அட்டகாசத்தைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கையை நீங்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சருக்குப் பதில் வந்திருக்கிறதா என்று பார்த்துவிட்டு, பிறகு எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் கொடுத்தது ஆய்விலே இருக்கிறது, உட்காருங்கள்.